Get FREE ALERTS on ur mobile! Just sms: ON SMSREADER to: 9870807070


# மாதிரித் தேர்வு - 1 (பொது அறிவு)

01. கீழ்கண்டவற்றுள் கூட்டுத் திசு எது?
A) சைலம் B) பாரன்கைமா
C) கோலன்கைமா D) ஸ்கிளிரென்கைமா

02. சிகரெட் புகையில் உள்ள கதிரியக்கத் தனிமம்?
A) பொலோனியம் - 200 B) பொலோனியம் - 210
C) பொலோனியம் - 220 D) பொலோனியம் - 230

03. சக்காரம் அபிசினேரம் என்பது இதன் இரு சொற்பெயர் ஆகும்
A) வாழை B) கரும்பு
C) மஞ்சள் D) தக்காளி

04. மீனில் அதிகமாகவுள்ள ஊட்டச்சத்து
A) புரதம் B) வைட்டமின்-ஏ
C) வைட்டமின்-சி D) கொழுப்பு

05. உருளையின் கன அளவு காணப் பயன்படுவது
A) $\frac{1}{4}\pi r^2h$ B) $\frac{1}{2}\pi r^2h$
C) $\pi r^2h$ D) இவற்றுள் ஏதுமில்லை

06. மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கூறியவர்
A) அரிஸ்டாட்டில் B) ஹெரடோட்டஸ்
C) பிளாட்டோ D) மால்தஸ்

07. இந்தியாவின் உயிர்நாடி கிராமங்கள் என்று குறிப்பிட்டவர்
A) காந்தி B) நேரு
C) அம்பேத்கர் D) சவார்கர்

08. நிலவு தனது அச்சில் சுழல ஆகும் நாட்கள்?
A) 29.5 B) 30
C) 27.3 D) 26.8

09. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி
கூற்று (A): ஒளிமறைப்பு நிகழ்ச்சி எல்லா பௌர்ணமி, அமாவாசை நாள்களில் நிகழ்வதில்லை.
காரணம் (R): நிலவு புவியை வலம் வரும் பாதையின் கோணம், புவி சூரியனை வலம் வரும் பாதையின் கோணத்தை விட $5^0$ சாய்வாக உள்ளது.
*இவற்றுள்:*
A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமாகும்
C) (A) சரி, ஆனால் (R) தவறு
D) (A) தவறு, ஆனால் (R) சரி

10. தமிழகத்தில் வடமொழியும் பிராகிருதமும் அறிமுகப்படுத்தப்பட்ட காலம்
A) களப்பிரர் காலம் B) குப்தர் காலம்
C) மௌரியர் காலம் D) பல்லவர் காலம்

11. *'லோக விபாகம்'* என்ற நூலை எழுதியவர்
   A) தண்டின் B) சர்வ நந்தி
   C) விசாக தத்தர் D) வஜ்ர நந்தி

12. உடலினப் பெருக்கம் இதில் காணப்படுகிறது
   A) பிரையோ.ஃ.பில்லம் B) ஹைட்ரா
   C) அமீபா D) இவை அனைத்தும்

13. புகையிலை பல் வண்ண நோய் வைரஸை படிகமாகப் பிரித்தெடுத்தவர்
   A) ஸ்டேன்லி B) கேலோ
   C) ஐவனோஸ்கி D) ஜென்னர்

14. நீராவிப்போக்கை கட்டுப்படுத்துவது
   A) இலைத்துளை B) கியூட்டிக்கிள்
   C) பாலிசேடு பாரன்கைமா D) கற்றை உறை

15. செல்லின் ஆற்றல் நிலையம் எனப்படுவது
   A) மைட்டோகான்ட்ரியா B) ரிபோசோம்
   C) பெரிக்கார்டியம் D) உட்கரு

16. பாண்டியரின் தலைநகராக விளங்கியது
   A) வஞ்சி B) காஞ்சி
   C) உறையூர் D) மதுரை

17. *'கலியுகராமன்'* என அழைக்கப்பட்ட பாண்டிய மன்னன்
   A) முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் B) இரண்டாம் ஜடாவர்மன்
   C) முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் D) இரண்டாம் மாறவர்மன்

18. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
   i) விஜயநகர பேரரசு காலத்தில் ஒரு சில சமூக மக்களுக்கு மட்டும் கல்வி அளிக்கப்பட்டது.
   ii) குருகுலக் கல்வி முறை பின்பற்றப்பட்டது.
   *இவற்றுள்:*
   A) சரி, தவறு B) தவறு, சரி
   C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

19. தமிழ்நாட்டில் மராத்திய ஆட்சியை ஏற்படுத்தியவர்
   A) சிவாஜி B) வெங்காஜி
   C) சாந்தாஜி D) நேதாஜி

20. 5 பழங்களின் விலை ₹ 25 எனில் 15 பழங்களின் விலை என்ன?
   A) ₹ 55 B) ₹ 65
   C) ₹ 75 D) ₹ 85

21. தீபக் என்பவர் தரகர் மூலமாக ஒரு வீட்டை ₹ 5,00,000 க்கு 2% தரகு கொடுத்து வாங்குகிறார் எனில் தரகுத்தொகை எவ்வளவு?
   A) ₹ 10,000 B) ₹ 20,000
   C) ₹ 1,000 D) ₹ 2,000

22. நீரில் ஹைட்ரஜன், ஆக்ஸிஜனின் கன அளவு இயைபானது
   A) 1:8 B) 2:1
   C) 8:16 D) 3:16

23. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| a) சதுரம் | - | 1. | பக்கம் × பக்கம் |
| b) இணைகரம் | - | 2. | அடிப்பக்கம் × உயரம் |
| c) முக்கோணம் | - | 3. | ½ × அடிப்பக்கம் × உயரம் |
| d) வட்டம் | - | 4. | π × ஆரம் × ஆரம் |

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 3 | 2 | 1 | 4 |

24. போர்டோக் கலவை என்பது
A) காப்பர் சல்பேட் + மெர்குரி
B) காப்பர் சல்பேட் + சுண்ணாம்பு நீர்
C) ஜிங்க் சல்பேட் + மெர்குரி
D) ஜிங்க் சல்பேட் + சுண்ணாம்பு நீர்

25. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
i. பாரீஸ் சாந்து எலும்பு முறிவு சிகிச்சையில் பயன்படுகிறது.
ii. எப்சம் உப்பு மலச்சிக்கலைத் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது.
iii. ரொட்டி சோடா வயிற்றில் அமிலத்தன்மையைக் குறைக்கும் ஆன்டாசிட் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகிறது.
iv. பெட்டாசியம் குளோரேட் தீப்பெட்டித் தொழிலில் பயன்படுகிறது.

*இவற்றுள்:*
A) i மற்றும் iii சரி
B) i மற்றும் iv சரி
C) i மட்டும் சரி
D) அனைத்தும் சரி

26. நைட்ரிக் அமிலத்தின் பொதுப்பெயர்
A) அக்குவா போர்டிஸ்
B) விட்ரியால் எண்ணெய்
C) மியூரியாட்டிக் அமிலம்
D) கார்பானிக் அமிலம்

27. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட நாள்
A) அக்டோபர் 24, 1945
B) அக்டோபர் 24, 1947
C) நவம்பர் 24, 1945
D) நவம்பர் 24, 1947

28. வட, தென் அரைக் கோளங்களில் $30^0$ அட்சம் முதல் $60^0$ அட்சம் வரையில் பரவியுள்ளது
A) பூமத்திய ரேகை மண்டலம்
B) வெப்ப மண்டலம்
C) மித வெப்ப மண்டலம்
D) துருவ மண்டலம்

29. மேற்குக் காற்றின் மற்றொரு பெயர்
A) கர்ஜிக்கும் நாற்பது
B) கோள் காற்று
C) வியாபாரக் காற்று
D) பருவக் காற்று

30. போரா என்பது ஒரு
A) குளிர்க்காற்று
B) வெப்பக்காற்று
C) நிலைக் காற்று
D) தென்றல் காற்று

31. நமது முன்னாள் பிரதம அமைச்சர் ராஜீவ் காந்தி அவர்கள் ஓட்டுரிமை வயதை 21லிருந்து 18 ஆகக்குறைத்த வருடம்
A) 1984
B) 1985
C) 1986
D) 1987

32. நாடு முழுவதும் முதன் முறையாக மின்னனு வாக்குப்பதிவு முறை அமுல்படுத்தப்பட்ட பொதுத் தேர்தல்
A) 12-வது பொதுத் தேர்தல்
B) 13-வது பொதுத் தேர்தல்
C) 14-வது பொதுத் தேர்தல்
D) 15-வது பொதுத் தேர்தல்

33. இந்திய தேசியக் காங்கிரசின் எந்த மாநாட்டில் (1955-ம் ஆண்டு) சமதர்மக் கொள்கை தொடர்பான தீர்மானம் முதன் முதலாக நிறைவேற்றப்பட்டது?
A) ஆவடி
B) சேலம்
C) வைக்கம்
D) மதுரை

34. தேசிய ஒருமைப்பாட்டு தினமாகக் கொண்டாடப்படுவது
A) அக்டோபர் 2
B) ஜனவரி 30
C) டிசம்பர் 23
D) நவம்பர் 19

35. கிழக்கு கடற்படை பிரிவின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
A) மும்பை
B) விசாகப்பட்டினம்
C) கொச்சி
D) சென்னை

36. எழுத்தறிவின்மையை அறவே நீக்குவதை அடிப்படையாகக் கொண்டு, நாடு முழுவதும் ஒரே மாதிரியான 10+2+3 கல்விக் கொள்கை கொண்டுவரப்பட்ட ஆண்டு
A) 1965
B) 1968
C) 1986
D) 1991

37. பெண்களுக்கு மூதாதையர் சொத்தில் சமபங்கு அளிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
A) 1956
B) 1961
C) 1976
D) 1981

38. கண்டப்போக்கு கோட்பாட்டை முன்மொழிந்தவர்
A) ஆல்பிரட் வெபர்
B) ஆல்பிரட் வெக்னர்
C) ஆல்பிரட் நோபல்
D) ஆல்பிரட் நூயி

39. கீழ்காண்பவற்றுள் எது *'ஆப்பரேட்டிங் சிஸ்டம்'*
A) எம் எஸ் - டாஸ்
B) விண்டோஸ்
C) லினக்ஸ்
D) இவை அனைத்தும்

40. I.M.S என்பதன் விரிவாக்கம்
A) Indian Medical Service
B) International Medical Store
C) Indian Mail Service
D) International Matching Service

41. இராமாயண வெண்பாவின் ஆசிரியர்
A) சுப்பிரமணிய ஐயர்
B) சுப்பிரமணிய சிவா
C) சுப்பிரமணிய பாரதி
D) சுப்பிரமணியம் பிள்ளை

42. சார்புப்பிழையின் அலகு
A) மீட்டர்
B) வெபர்
C) மிக்கி
D) அலகு இல்லை

43. சென்னை மருத்துவக்கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு
A) 1835
B) 1836
C) 1851
D) 1857

44. *'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'* - எனப் பாடியவர்
A) புரட்சிக் கவி B) காந்தியக் கவி
C) தேசியக் கவி D) கவிமணி

45. 1820-ம் ஆண்டு சென்னை மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர்
A) வெல்லஸ்லி B) தாமஸ் மன்றோ
C) வில்லியம் பென்டிங் D) சார்லஸ் உட்

46. சமரசசுத்த சன்மார்க்க சங்கத்தை தோற்றுவித்தவர்
A) இராமலிங்க அடிகளார் B) இராஜாராம் மோகன்ராய்
C) ஆத்மாராங் பாண்டுரங் D) தயானந்த சரஸ்வதி

47. ஈ.வே.ராவிற்கு *'பெரியார்'* என்ற பட்டம் அளிக்கப்பட்ட மாநாடு
A) சென்னை B) சேலம்
C) வைக்கம் D) தஞ்சாவூர்

48. ஆங்கிலேய ஆட்சியை தமிழ் நாட்டிலிருந்து முதன் முதலில் எதிர்த்தவர்
A) புலித்தேவர் B) மருது சகோதரர்
C) கட்டபொம்மன் D) ஊமைத்துரை

49. *'தமிழ்தாத்தா'* என்று அழைக்கப்படுபவர்
A) வ.வே.சு ஐயர் B) உ.வே.சாமிநாத ஐயர்
C) மறைமலை அடிகள் D) திரு.வி.க

50. தமிழில் வெளிவந்த முதல் பேசும்படம்
A) ஆலம் ஆரா B) வீரபாண்டியன்
C) காளிதாஸ் D) அரிச்சந்திரா

51. இடது ஆரிக்கிளுக்கும், இடது வென்ட்ரிக்கிளுக்கும் இடையே உள்ள வால்வு
A) ஈரிதழ் வால்வு B) மூவிதழ் வால்வு
C) மகாதமனி D) செப்டா

52. இலைத் தொழில் தண்டு இதில் காணப்படுகிறது
A) பாசி.ஃபுளோரா B) டியூராண்டா
C) கற்றாழை D) யூ.ஃபோர்பியா

53. பூக்கும் தாவரங்கள் என்பவை
A) கிரிப்டோகேம்கள் B) ஃபெனெரோகேம்கள்
C) பிரையோ.ஃபைட்டுகள் D) டெரிடோ.ஃபைட்டுகள்

54. இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட முதல் ஏவுகனை
A) அக்னி B) பிரித்வி
C) ஆரியபட்டா D) பிரம்மோஸ்

55. *'டங்கா'* என்ற வெள்ளி நாணயத்தை வெளியிட்டவர்
A) சும்சுதீன் இல்டுமிஷ் B) குத்புதீன் ஐபக்
C) இப்ராஹிம் லோடி D) கஜினி முகமது

56. அதிக பழங்குடி(ST) மக்களைக் கொண்ட மாநிலம்
A) மத்தியபிரதேசம் B) உத்திரப்பிரதேசம்
C) பஞ்சாப் D) ஹரியானா

57. பஞ்சாயத்து முறை அரசியலமைப்பின் ஒரு பகுதியானது கீழ்கண்ட திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது
A) 72-வது திருத்தம் B) 73-வது திருத்தம்
C) 44-வது திருத்தம் D) 91-வது திருத்தம்

58. *"நன்றி கடவுளே நான் என் கடமையை செய்துவிட்டேன்"* - இது யாருடைய கடைசி வார்த்தைகள்
A) காந்தி B) நேரு
C) நெல்சன் D) லிங்கன்

59. நமது அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் அமைந்துள்ள பகுதி
A) பகுதி-I B) பகுதி-II
C) பகுதி-III D) பகுதி-IV

60. திட்டவிகித விதியை (மாறா விகித விதி) அறிவித்தவர்
A) ப்ரௌஸ்ட் B) டால்டன்
C) லவாய்சியர் D) பெர்னார்டு

61. மத்திய மின் வேதியியல் ஆய்வு மையம் அமைந்துள்ள இடம்
A) பாவ் நகர் B) அகமதாபாத்
C) ஜெர்காட் D) காரைக்குடி

62. 1 குதிரைத்திறன்(HP) என்பது
A) 746 மெகாவாட் B) 746 வாட்
C) 1000 வாட் D) 1000 மெகாவாட்

63. சிந்து சமவெளி நாகரிக காலம்
A) கி.மு 2750 முதல் கி.மு 1500 வரை
B) கி.மு 3250 முதல் கி.மு 1600 வரை
C) கி.மு 3250 முதல் கி.மு 2750 வரை
D) கி.மு 2750 முதல் கி.மு 1000 வரை

64. ஒருவர் 27 கிலோமீட்டர் தொலைவை 9 மணிநேரத்தில் கடக்கிறார். மேலும், திரும்பி வரும்போது மணிக்கு 5 கிலோமீட்டர் வேகத்தில் வருகிறார் எனில் அவரது மொத்த பயணத்தின் சராசரி வேகம் என்ன?
A) 6.75 கிமீ/மணி B) 6.57 கிமீ/மணி
C) 3.57 கிமீ/மணி D) 3.75 கிமீ/மணி

65. ஒரு சதுர மைல் (1 sq. mile) என்பது
A) 560 ஏக்கர் (560 acres) B) 640 ஏக்கர் (640 acres)
C) 100 ஏக்கர் (100 acres) D) 1000 ஏக்கர் (1000 acres)

66. சர்தார் வல்லபாய் படேல் பன்னாட்டு விமான நிலையம் அமைந்துள்ள இடம்
A) அலகாபாத் B) அஹமதாபாத்
C) ஹைதராபாத் D) செகந்திராபாத்

67. ஆரிய சமூகத்தில் எவ்வழி மரபு பின்பற்றப்பட்டது
A) தாய் வழி B) தந்தை வழி
C) மாமன் வழி D) தனி வழி

68. பிரயாகை நதிக்கூட்டம் பின்வரும் யாரோடு தொடர்புடையது
A) கனிஷ்கர் B) ஹர்சர்
C) குமார குப்தர் D) ஹரிதத்தர்

69. அரசன் தன் அசுவம் சென்ற நாடுகளை தன் வசப்படுத்திக் கொண்டான். இங்கு '*அசுவம்*' என்ற சொல் குறிப்பது
A) யானையை B) குதிரையை
C) பசுவை D) தேரை

70. பிரகதீசுவரர் ஆலயத்தினை தஞ்சாவூரில் கட்டியவர்
A) இராசராச சோழன் B) இராசேந்திர சோழன்
C) கரிகால சோழன் D) விஜயாலயச் சோழன்

71. 20 கிலோகிராம் அரிசிப் பையை 1 மீட்டர் உயரத்திற்கு தூக்கினால், செய்யப்பட்ட வேலை?
A) 10 ஜுல் B) 20 ஜுல்
C) 200 ஜுல் D) இவற்றில் ஏதுமில்லை

72. 19-வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற இடம்
A) டெல்லி B) டாக்கா
C) லண்டன் D) கனடா

73. 2010-ம் ஆண்டிற்கான மருத்துவத்துறை நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்
A) ராபர்ட் எட்வர்ட்ஸ் B) மைக்கேல் ∴பெனெல்
C) மீரா சங்கர் D) மைக்கேல் ரீகன்

74. பிரிட்டனைச் சேர்ந்த பெண் படைப்பாளிகளுக்கு வழங்கப்படும் இலக்கிய விருது
A) புலிட்சர் பரிசு B) புக்கர் பரிசு
C) ஆரஞ்சு பரிசு D) கிராமி விருது

75. இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர்
A) வில்லியம் ஹார்வி B) கார்ல் லான்ட் ஸ்டெனர்
C) மார்ட்டின் க்ளாப்ரோத் D) யூஜின் பெலிகோட்

76. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
a) இணைப்பும் விலகுதலும் - 1. T.H மார்கன்
b) பிணைப்பும் குறுக்கேற்றமும் - 2. பேட்சன், புன்னட்
c) பாக்டீரிய இயல்பு மாற்றம் - 3. மெண்டல்
d) சார்பின்றி ஒதுங்குதல் - 4. கிரி∴பித்

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

77. கோவை உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் (2010) "*செம்மொழி தமிழ்*" விருது பெற்ற பேராசிரியர் அஸ்கோ பர்போலா சார்ந்த நாடு
A) பிரேசில் B) பின்லாந்து
C) அமெரிக்கா D) இங்கிலாந்து

78. தென் ஆப்பிரிக்காவில் நடந்து முடிந்த 19-வது உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் (2010) சாம்பியன் பட்டம் வென்ற நாடு
A) நெதர்லாந்து B) இத்தாலி
C) ஜெர்மனி D) ஸ்பெயின்


79. *"ஜன்மபூமி"* என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டவர்
    A) பாரதி B) பாரதிதாசன்
    C) ஜெயகாந்தன் D) கண்ணதாசன்

80. சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படும் லீப் வருடம் 53 ஞாயிற்றுக்கிழமைகளைக் கொண்டிருப்பதற்கான நிகழ்தகவு
    A) 2/7 B) 7/2
    C) 1/7 D) 7/1

81. பக்சார் போர் நடைபெற்ற ஆண்டு
    A) 1757 B) 1761
    C) 1764 D) 1799

82. இந்திய இருப்புப்பாதைத் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர்
    A) டல்ஹௌசி B) ராபர்ட் கிளைவ்
    C) வில்லியம் பெண்டிங் D) கர்சன்

83. கேள்விக் குறி உள்ள இடத்திற்கு பொருந்தும் சரியான எண் யாது?




    A) 12 B) 7
    C) 105 D) 51

84. மூளையில் தோன்றும் கட்டிகளின் இடத்தைக் கண்டறியப் பயன்படுவது
    A) ரேடியோ கோபால்ட் B) ரேடியோ அயோடின்
    C) ரேடியோ சோடியம் D) ரேடியோ இரும்பு

85. இந்திய ரூபாய்க்கு புதிய அடையாளக் குறியீட்டை ( ₹ ) உருவாக்கிக் கொடுத்த தமிழகத்தைச் சேர்ந்த மாணவரின் பெயர்
    A) D வினய் குமார் B) D உதய குமார்
    C) S சுரேந்திர நாத் D) S ஸ்ரீபதி ரகுநாத்

86. இந்தியத் தேர்தல் ஆணையம் (நிர்வாசன் சதன்) அமைந்துள்ள இடம்
    A) சென்னை B) மும்பை
    C) புது தில்லி D) கொல்கத்தா

87. கீழ்காண்பவற்றுள் அலுமினியத்தின் தாது எது?
    A) பாக்ஸைட் B) காலமின்
    C) மாக்னடைட் D) குப்ரைட்

88. பின்வருவனவற்றுள் எது சரியாக பொருத்தப்பட்டுள்ளது?
   A) அயோடின் - அலோகம்
   B) கிராப்பைட் - உலோகம்
   C) எஃகு - 2-5% கார்பன்
   D) மாக்னடைட் - அலுமினியத்தின் தாது

89. பொது இராணுவப் பணியாளர் சட்டம் யாருடைய ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்டது
   A) கர்சன் பிரபு
   B) பென்டிங் பிரபு
   C) வெல்லஸ்லி பிரபு
   D) கானிங் பிரபு

90. ஓவியம் போன்று கண்ணைக்கவருகிற தோற்றத்தினைக் கொண்ட எரிமலைகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன
   A) பல்சிட்டக்கூம்புகள்
   B) கேடய எரிமலைகள்
   C) கரி சிட்டக்கூம்புகள்
   D) மோனலோவா

91. ஒவ்வொரு சிறுபொழுதும் எத்தனை நாளிகைகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது
   A) 5
   B) 10
   C) 24
   D) 60

92. கோயமுத்தூரிலிருந்து ஈரோடு மாவட்டம் பிரிக்கப்பட்ட ஆண்டு
   A) 1976
   B) 1979
   C) 1987
   D) 1989

93. குதுவல்கள் எனப்படுபவை
   A) தேரிக் குன்றுகள்
   B) பாலை நிலங்கள்
   C) சமுதாயக் காடுகள்
   D) வேளாண் நிலங்கள்

94. மதராஸ் மாகாணம் *'தமிழ்நாடு'* என பெயர் மாற்றம் செய்யப்பட்ட நாள்
   A) 1967 ஆகஸ்ட் 15
   B) 1967 டிசம்பர் 21
   C) 1969 சனவரி 14
   D) 1969 மார்ச் 16

95. சந்தைப் பொருளாதாரத்திற்கு எடுத்துக்காட்டு
   A) சிங்கப்பூர்
   B) பிரான்ஸ்
   C) சுவீடன்
   D) இந்தியா

96. ஒத்துழையாமை இயக்கத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் மாநாடு
   A) கல்கத்தா
   B) லக்னோ
   C) சென்னை
   D) மும்பை

97. *"லோக் அதாலத்"* என்பது ஒரு
   A) மத்தியில் உச்சநீதிமன்றத்தின் அங்கம்
   B) மாநிலத்தில் உயர்நீதிமன்றத்தின் அங்கம்
   C) சட்ட ஆலோசனை வழங்கும் தன்னார்வ அமைப்பு
   D) மேற்கூறிய ஏதுமில்லை

98. உச்சநீதிமன்றம் கொண்டிருப்பது
   A) ஒரு தலைமை நீதிபதி மற்றும் 25 மற்ற நீதிபதிகள்
   B) ஒரு தலைமை நீதிபதி மற்றும 55 மற்ற நீதிபதிகள்
   C) ஒரு தலைமை நீதிபதி மற்றும 30 மற்ற நீதிபதிகள்
   D) ஒரு தலைமை நீதிபதி மற்றும 31 மற்ற நீதிபதிகள்

**Get FREE ALERTS on ur mobile! Just sms: ON SMSREADER to: 9870807070**


99. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
    - i. வயதுவந்தோர் ஓட்டுரிமை (Adult Franchise) அதாவது, 18 வயது நிரம்பியவர்கள் ஓட்டுப்போட 61-வது சட்டத்திருத்தம் வழிவகுக்கிறது.
    - ii. இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் பகுதி IVA வில் குறிப்பிடப்பட்டுள்ளது.
    - iii இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.
    - iv ஃபசல் அலி தலைமையில் H.N. குன்ஸ்ரு H.N. பனிக்கர் அமைத்த குழு மொழிவாரி மாநிலங்கள் அமைக்க பரிந்துரைத்தது. 7 வது சட்டத் திருத்தத்தின் படி மொழிவாரி மாநிலங்கள் 1956-ல் உருவாக்கப்பட்டன.

    *இவற்றுள்:*

    A) i, iii மற்றும் iv சரி B) i, ii மற்றும் iv சரி
    C) iv மட்டும் சரி D) அனைத்தும் சரி

100. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
    - a) ஷெட்டல்வாட் கமிஷன்(1966) - 1. அயோத்தி பாபர் மசூதி சம்பவம்
    - b) லிபரான் கமிஷன் (1992) - 2. மத்திய மாநில உறவுகள்
    - c) நானாவதி கமிஷன் (2000) - 3. சீக்கியர்களுக்கு எதிரான வன்முறை
    - d) மண்டல் கமிஷன் (1979) - 4. ஓ.பி.சி. வகுப்பை அடையாளம் காணல்

    *குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 1 | 4 | 2 |

The
Road to success??
Is always under
construction
- Siva.T

# மாதிரித் தேர்வு - 1 (பொதுத் தமிழ்)

101. சொற் பொருளறிந்து பொருத்துக

| *சொல்* | *பொருள்* |
|---|---|
| 1. பழனம் | அ. கடல் |
| 2. வேலை | ஆ. பெண் |
| 3. ஆரணங்கு | இ. புகழ் |
| 4. இசை | ஈ. வயல் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஈ | அ | ஆ | இ |

102. பொரு அறிந்து பொருத்துக

| *சொல்* | *பொருள்* |
|---|---|
| 1. தளை | அ. செலுத்துவது |
| 2. மாடு | ஆ. நீக்கி |
| 3. ஔீஇ | இ. செல்வம் |
| 4. உய்ப்பது | ஈ. கட்டு |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | ஆ | அ |
| B) | இ | ஆ | ஈ | அ |
| C) | அ | இ | ஆ | ஈ |
| D) | ஆ | அ | ஈ | இ |

103. பொருத்துக

| | |
|---|---|
| 1. அருணகிரிநாதர் | அ. தேன் மழை |
| 2. சுரதா | ஆ. திருப்புகழ் |
| 3. அழ. வள்ளியப்பா | இ. வேரில் பழுத்த பலா |
| 4. சமுத்திரம் | ஈ. சிரிக்கும் பூக்கள் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஈ | அ | ஆ | இ |

104. பொருத்துக

| | |
|---|---|
| 1. திணைமொழி ஐம்பது | அ. கண்ணங்கூத்தனார் |
| 2. கார் நாற்பது | ஆ. சமுதாய வீதி |
| 3. ஜெயகாந்தன் | இ. ஒருபிடிச் சோறு |
| 4. நா. பார்த்தசாரதி | ஈ. கண்ணன் சேந்தனார் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | அ | இ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | ஈ | அ | ஆ | இ |

105. பொருத்துக

| | |
|---|---|
| 1. சிறுகதை மன்னன் | அ. வி முனிசாமி |
| 2. பாட்டுக்கொரு புலவன் | ஆ. பெருஞ்சித்திரனார் |
| 3. திருக்குறளார் | இ. பாரதியார் |
| 4. பாவலர் ஏறு | ஈ. புதுமைப்பித்தன் |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | இ | அ | ஆ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | இ | ஈ | அ | ஆ |
| D) | ஈ | அ | ஆ | இ |

106. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
*"ஈரநெஞ்சினரை வள்ளல்கள் என வாழ்த்துகிறோம்"*
A) யாரை வள்ளல்கள் என வாழ்த்துகிறோம்?
B) ஈரநெஞ்சினரை யார் என்று வாழ்த்துகிறோம்?
C) வள்ளல்கள் என வாழ்த்தப்படுபவர் யார்?
D) எவ்வாறு ஈரநெஞ்சினரை வாழ்த்துகிறோம்?

107. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
*"வானளாவிய இமயமலை நாட்டைக் காக்கிறது"*
A) இமயமலை எங்குள்ளது?
B) இமயமலை வானத்தைக் காக்கிறதா?
C) வானளாவிய இமயமலையின் பயன் யாது?
D) இமயமலை உயர்ந்து விளங்குகிறதா?

108. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
*"இளமையில் கல்வி கற்க வேண்டும்"*
A) இளமையில் கல்வி கற்க வேண்டுமா?
B) இளமையில் எதனைக் கற்க வேண்டும்?
C) கல்வி என்றால் என்ன?
D) எங்கு கல்வி கற்க வேண்டும்?

109. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
*"உலகின் தலைசிறந்த அறநூல் திருக்குறள்"*
A) உலகின் தலைசிறந்த அறநூல் எது?
B) திருக்குறள் தலைசிறந்த அறநூலா?
C) திருக்குறள் எத்தகைய நூல்?
D) திருக்குறள் எவ்வகை நூல்?

110. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க:
*"சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருப்பது வியப்பிற்குரியது"*
A) சித்த வைத்தியத்தில் எது அமைந்துள்ளது?
B) சித்த வைத்தியத்தில் வியப்பிற்குரியது எது?
C) சித்த வைத்தியத்தின் சிறப்பு யாது?
D) உணவும் மருந்தும் சிறப்பாக அமைந்திருப்பது எதில்?

111. *"மலர்க் கரம்"* எனும் சொல்லின் இலக்கணக்குறிப்பைக் கண்டறிக
A) உம்மைத் தொகை B) உவமைத் தொகை
C) உருவகம் D) அன்மொழித்தொகை

112. இலக்கணக் குறிப்பு தருக: *"வெஞ்சுரம்"*
A) குணப் பெயர்
B) பண்புத் தொகை
C) வினைத் தொகை
D) உவமைத் தொகை

113. *"கண்ணா, வா!"* – எவ்வகைத் தொடர்?
A) எழுவாய்த் தொடர்
B) விளித் தொடர்
C) வினையெச்சத் தொடர்
D) பெயரெச்சத் தொடர்

114. *"ஓடி வென்றான்"* - இலக்கணக்குறிப்பு தருக
A) பெயரெச்சம்
B) முற்றெச்சம்
C) எச்சம்
D) வினையெச்சம்

115. இலக்கணக் குறிப்பறிக – *வாழிய*
A) குறிப்பு வினைமுற்று
B) தெரிநிலை வினைமுற்று
C) ஏவல் வினைமுற்று
D) வியங்கோள் வினைமுற்று

116. *'தீந்தமிழ்'* சரியாகப் பிரித்தெழுதப்பட்ட சொல்லைத் தேர்வு செய்க
A) தீ + தமிழ்
B) தீமை + தமிழ்
C) தீந் + தமிழ்
D) தீம் + தமிழ்

117. பிரித்தெழுதுக - *அ.்.றிணை*
A) அ.்.து + திணை
B) அல் + திணை
C) அ.்.று + இணை
D) அ + திணை

118. பிரித்தெழுதுக - *செம்மொழி*
A) செம்மை + மொழி
B) செ + மொழி
C) செம் + மொழி
D) செங்கு + மொழி

119. பிரித்தெழுதுக - *உயர்பேராளன்*
A) உயர் + பேர் + ஆளன்
B) உயர் + பெருமை + ஆளன்
C) உயர்வு + பேர் + ஆளன்
D) உயர் + பேர் + ஆலன்

120. *'நாண்மதி'* எனும் சொல் இவ்வாறு பிரியும்
A) நாண் + மதி
B) நாள் + மதி
C) நாண்கு + மதி
D) நால் + மதி

121. மரபு பிழையற்ற தொடரை எடுத்தெழுதுக
A) சோள வயல், பூந்தோட்டம்
B) சோளக்கொல்லை, பூந்தோட்டம்
C) சோளக்கொல்லை, பூந்தோப்பு
D) சோளக்காடு, பூந்தோட்டம்

122. மரபுப் பிழையற்ற தொடர் எது?
A) மயில் கூவும்
B) மயில் கீச்சிடும்
C) மயில் அகவும்
D) மயில் கத்தும்

123. சரியான மரபுப் பெயர் எது?
A) அணிற்பிள்ளை
B) மான்குட்டி
C) சிங்கக்கன்று
D) நாய்க்குருளை

124. மரபு வழு இல்லாத தொடரைத் தேர்க
A) இராமன் அம்பு தொடுத்தான்
B) இராமன் அம்பு செலுத்தினான்
C) இராமன் அம்பு எய்தான்
D) இராமன் அம்பு விட்டான்

125. மரபுப்பிழை நீங்கிய தொடரை எழுதுக
A) குதிரை கத்தும் B) குதிரை கூச்சலிடும்
C) குதிரை கனைக்கும் D) குதிரை உறுமும்

126. "*ஓதாது உணர்ந்த பெருமான்*" என அழைக்கப்படுபவர்
A) சம்பந்தர் B) திருத்தக்க தேவர்
C) இராமலிங்க அடிகள் D) அருணகிரிநாதர்

127. "*பாவேந்தர்*" என போற்றப்படுபவர்
A) பாரதியார் B) பாரதிதாசன்
C) திரு.வி.க D) கவிமணி

128. "*கிருத்துவக் கம்பர்*" என வழங்கப்படுபவர்
A) வீரமாமுனிவர் B) எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை
C) வேதநாயகம் பிள்ளை D) உமறுப்புலவர்

129. "*முத்தமிழ் காவலர்*" என்று போற்றப்பட்டவர்
A) டி.கே. சிதம்பரனார் B) கி.ஆ.பெ. விசுவநாதம்
C) மு. கருணாநிதி D) ஆ. சிதம்பரனார்

130. "*தென்னாட்டு பெர்னாட்ஷா*" என்று அழைக்கப்படுபவர்
A) அறிஞர் அண்ணா B) பெரியார்
C) வ.உ. சிதம்பரனார் D) அம்பேத்கார்

131. '*Autonomy*' என்பதன் தமிழ்ச் சொல்
A) மன்னராட்சி B) மக்களாட்சி
C) மாற்றார் ஆட்சி D) தன்னாட்சி

132. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக - '*Photosythesis*'
A) சூலகம் B) மகரந்தம்
C) ஒளிச்சேர்க்கை D) மகரந்தச் சேர்க்கை

133. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைக் காண்க:- '*இண்டர்வியூ*'
A) பேட்டி B) நேர்காணல்
C) நேர்முகம் D) நேருக்கு நேர்

134. பிறமொழிச் சொற்கள் நீக்கிய தொடரைத் தேர்க
A) அறிவியல் அறிஞர்கள் அறிவாளிகள்
B) விஞ்ஞானிகள் அறிவாளிகள்
C) அறிவியல் மேதைகள் அறிவாளிகள்
D) விஞ்ஞானிகள் புத்திசாலிகள்

135. '*மணியார்டர்*' என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்?
A) காசோலை B) பணவிடை
C) வரைவோலை D) அஞ்சல் ஓலை

136. *'ஐ'* என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் சரியான பொருளை அறிக
A) விகுதி B) அன்பு
C) அறிவு D) தந்தை

137. *'கோ'* என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் சரியான பொருள்?
A) அமைச்சன் B) அரசன்
C) கொல்லன் D) தச்சன்

138. *'தே'* என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் சரியான பொருளை காண்க
A) தேம்புதல் B) தேடுதல்
C) இறைவன் D) தேனிலவு

139. *'பை'* என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் சரியான பொருளை தேர்க
A) கரம் B) கூர்மை
C) நேயம் D) உறை

140. *'வீ'* என்னும் ஓரெழுத்து ஒரு மொழியின் சரியான பொருளை அறிக
A) செல் B) வருத்தம்
C) மலர் D) நுரை

141. வேர்ச்சொல்லைத் தேர்க – *"கண்டனர்"*
A) கண் B) கண்டு
C) காண் D) கான்

142. *"கெட்டான்"* என்பதன் வேர்ச்சொல்
A) கெடு B) கேடு
C) கெட்ட D) கெட்டு

143. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க: *"காமுறுவர்"*
A) காமு B) கா
C) காமுறு D) காம்

144. *"பாரேன்"* என்பதன் வேர்ச்சொல்லைத் தேர்க
A) பாரு B) பார்
C) பாரே D) பாருஉ

145. *"வந்தான்"* என்ற சொல்லின் வேர்ச்சொல் எது?
A) வந்த B) வந்து
C) வா D) வருவான்

146. சொற்களை ப, பா வரிசையில் சீர் செய்க: பார், பெற்ற, பழுது, பேறு, பூ
A) பழுது, பார், பூ, பெற்ற, பேறு
B) பார், பழுது, பூ, பேறு, பெற்ற
C) பார், பெற்ற, பழுது, பேறு, பூ
D) பழுது, பெற்ற, பார், பேறு, பூ

147. அகர வரிசைப்படி எழுதுக:
A) கட்டுரை, தட்டு, சங்கு, பங்கு
B) பங்கு, தட்டு, சங்கு, கட்டுரை
C) கட்டுரை, சங்கு, தட்டு, பங்கு
D) சங்கு, பங்கு, கட்டுரை, தட்டு

148. அகர வரிசைப்படி எழுதுக:
A) கடல், மடல், விடல், படல்
B) மடல், விடல், படல், கடல்
C) படல், விடல், கடல், மடல்
D) கடல், படல், மடல், விடல்

149. அகர வரிசைப்படி எழுதுக:
A) சூது, நூல், கூடை, மூடி
B) கூடை, சூது, நூல், மூடி
C) நூல், மூடி, சூது, கூடை
D) மூடி, கூடை, நூல், சூது

150. அகர வரிசைப்படி எழுதுக:
A) தங்கை, மங்கை, நங்கை, கங்கை
B) கங்கை, தங்கை, நங்கை, மங்கை
C) கங்கை, தங்கை, மங்கை, நங்கை
D) தங்கை, நங்கை, மங்கை, கங்கை

151. *"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்."* – மோனை அமைந்த சொற்களை எழுதுக
A) அருமை - பெருமை B) அருமை - அசாவாமை
C) உடைத்தென்று - வேண்டும் D) பெருமை - முயற்சி

152. எதுகையை கண்டெழுதுக:
*"ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே*
*சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே."*
A) ஈன்றுபுறம் - தருதல் B) ஈன்றுபுறம் - சான்றோன்
C) தருதல் - என்தலைக் D) சான்றோன் - ஆக்குதல்

153. *"வேரல் வேலி வேர்கோட் பலவின்*
*சாரல் நாட செவ்வியை யாகுமதி"* - எதுகையை சுட்டுக
A) வேரல் - சாரல் B) வேரல் - பலவின்
C) சாரல் - நாட D) சாரல் - செவ்வி

154. *"இனிய உளவாக இன்னாத கூறல்"* - தொடரில் அமைந்த மோனையை சுட்டுக
A) இனிய - உளவாக B) இனிய - இன்னாத
C) இனிய - கூறல் D) இன்னாத - உளவாக

155. பின்வரும் தொடரில் அமைந்துள்ள இயைபைக் காண்க:
*"தீயே உனக்கொருநாள் தீமூட்டிப் பாரோமோ!*
*தெய்வமே உன்னையும் நாம் தேம்பியழ வைப்போமோ!"*
A) தீயே - தீமூட்டிப் B) தெய்வமே - தேம்பியழ
C) உன்னையும் - வைப்போமோ D) பாரோமோ! - வைப்போமோ!

156. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) எழுத்து B) வெண்பா
C) அசை D) சீர்

157. பொருந்தாச் சொல்லைத் தேர்க:
A) தமிழ்நாடு B) ஆந்திரா
C) கங்கை D) கருநாடகா

158. பொருந்தாச் சொல்லைத் தேர்க:
A) கரி B) பரி
C) வேழம் D) களிறு

159. பொருந்தாச் சொல்லைத் தேர்க:
A) பாடாண் திணை B) வெட்சித் திணை
C) பொதுவியல் திணை D) குறிஞ்சித் திணை

160. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
A) யாமம் B) வைகறை
C) எற்பாடு D) மார்கழி

161. எதிர்ச்சொல் தேர்க: *"அண்மை"*
A) உண்மை B) பக்கம்
C) சேய்மை D) நன்மை

162. *"நண்பர்"* - எதிர்ச்சொல் தருக
A) உறவினர் B) எதிரி
C) உற்றார் D) பகைவர்

163. *"மலர்தல்"* - எதிர்ச்சொல் தருக
A) குவிதல் B) குளிர்தல்
C) மலர்தரல் D) விரிதல்

164. *"வறுமை"* என்பதன் எதிர்ச்சொல்
A) சிறுமை B) பொருமை
C) பெருமை D) வளமை

165. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக: - *"தண்மை"*
A) தட்பம் B) மழை
C) வெம்மை D) குளிர்

166. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க

| | *இலை* | *இளை* |
|---|---|---|
| A) | காம்பு | கிளை |
| B) | தழை | மெலி |
| C) | மெலிதல் | இளைஞன் |
| D) | செடி | இழை |

167. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க

| | *வால்* | *வாள்* |
|---|---|---|
| A) | அம்பு | கூர்மை |
| B) | விலங்குறுப்பு | கருவி |
| C) | கருவி | வெண்மை |
| D) | கருவி | கத்தி |

168. ஒலி வேறுபாடறிந்து சரியான விடையைத் தேர்க

| | *அரை* | *அறை* |
|---|---|---|
| A) | பகுதி | வீடு |
| B) | மீதி | பாதி |
| C) | பாதி | வீட்டின் பகுதி |
| D) | வீட்டின் பகுதி | பாதி |

169. ஒலி வேறுபாடறிந்து பொருத்துக:

| | *ஒலி* | *ஒளி* | *ஒழி* |
|---|---|---|---|
| A) | ஒலிக்க | ஓளிக | ஓடுக |
| B) | அலை | பார்வை | விடுதல் |
| C) | சத்தம் | வெளிச்சம் | நீங்கு |
| D) | ஆரவாரம் | மின்னல் | அழி |

170. ஒலி வேறுபாடறிந்து சரியாகப் பொருத்துக:

| | *விலை* | *விளை* | *விழை* |
|---|---|---|---|
| A) | மதிப்பு | விளைவித்தல் | விரும்புதல் |
| B) | ரூபாய் | விழுதல் | கழை |
| C) | மதிப்பு | வினை | பிழை |
| D) | ரூபாய் | வினைவித்தல் | விரும்புதல் |

171. வழூஉச் சொற்களை நீக்குக
A) தலகாணி
B) தலைவாணி
C) தலையணை
D) தலவாணி

172. வழூஉச் சொல் நீங்கிய தொடரை எழுதுக
A) அடி மழை பேஞ்சது
B) அடை மழை பேஞ்சது
C) அடை மழை பெய்தது
D) அட மழை பெய்தது

173. வழூஉச் சொல் நீங்கிய தொடரை எழுதுக
A) யான் கவிஞன் அல்ல
B) யான் கவிஞன் அல்லேன்
C) யான் கவிஞன் அன்று
D) யான் கவிஞன் அல்லனே

174. வழூஉச் சொல் திருத்தம் பெற்ற சொல்லைத் தேர்ந்தெடு
A) வவுறு
B) சீயக்காய்
C) முளகாய்
D) நிலவு

175. வழூஉச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க:
A) முன்னூறு ரூபாய் வேணுமுன்னான் வளவன்
B) முண்ணூறு ருவா வேணுன்னா வளவன்
C) முந்நூறு ரூபாய் வேண்டுமென்றான் வளவன்
D) மூனுநூறு வேண்டும்னான் வளவன்

176. *"கடலில் கரைத்த பெருங்காயம் போல"* - உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்
A) மணமில்லை
B) அறிவு மங்கியது
C) நிறைவாதல்
D) எதற்கும் பயனில்லை

177. *"சுதந்திரப் பறவை போல"* - உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்
A) தியாகம்
B) விரைவு
C) கோபம்
D) ஆனந்தம்

178. *"பொதிர்கொள் பூமணம் போல"* - என்ற உவமையால் விளக்கப்படும் பொருத்தமான பொருள் யாது?
A) மணம் வீசுதல்
B) வெளிப்படுதல்
C) மறைந்திருத்தல்
D) இணைதல்

179. *"இண ருழ்த்தும் நாறா மலரணைவர்"* - உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்
A) கற்றோர் அவையில் பேசத் தெரியாதவர் B) நிரம்பக் கற்றவர்
C) கற்றதை விரித்துரைக்கத் தெரியாதவர் D) நன்கு கற்காதவர்

180. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுக்கவும்: *"குன்றின் மேலிட்ட விளக்கென"*
A) உயரமாகத் தெரிகிறது B) பாதுகாப்பாக இருக்கிறது
C) வெளிச்சமாகத் தெரிகிறது D) தெளிவாகத் தெரிகிறது

181. *"நீ உண்ணுதி"* - எவ்வகை வாக்கியம்?
A) ஏவல் வினைமுற்று B) உணர்ச்சி வாக்கியம்
C) வினா வாக்கியம் D) கட்டளை வாக்கியம்

182. "*இளங்கோவடிகள் கதை கேட்டார்; கருத்தில் வைத்தார்; காவியம் படைத்தார்.*" - எவ்வகை வாக்கியம் எனக் குறிப்பிடுக
A) தொடர் வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) உணர்ச்சி வாக்கியம் D) வினா வாக்கியம்

183. *"கனிமொழி இன்னிசை பாடினாள்"* - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக
A) உடன்பாட்டு வாக்கியம் B) கலவை வாக்கியம்
C) செய்தி வாக்கியம் D) எதிர்மறை வாக்கியம்

184. வாக்கிய வகையை சுட்டுக - *"மிக உயர்ந்த இக்கோபுரத்தைக் காண்பாயாக"*
A) வினா வாக்கியம் B) உணர்ச்சி வாக்கியம்
C) வியங்கோள் வினைமுற்று வாக்கியம் D) கட்டளை வாக்கியம்

185. *"அண்ணா பள்ளியின் அரிச்சுவடி"* என்பது
A) எங்கிருந்தாலும் வாழ்க B) வசைமொழி கூறியவர் வாழ்க
C) நல்லவர்கள் வாழ்க D) மறப்போம் மண்ணிப்போம்

186. சந்திப் பிழை இல்லாத தொடரைத் தேர்க
A) முரட்டுக் காளையை பிடித்து அடக்கினான்
B) முரட்டுக் காளையைப் பிடித்து அடக்கினான்
C) முரட்டு காளையை பிடித்து அடக்கினான்
D) முரட்டு காளையைப் பிடித்து அடக்கினான்

187. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்க:
A) அறச் செயலே ஆக்கத்தைக் கொடுக்கும்
B) அறச் செயலே ஆக்கத்தை கொடுக்கும்
C) அற செயலே ஆக்கத்தைக் கொடுக்கும்
D) அற செயலே ஆக்கத்தை கொடுக்கும்

188. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் ஆக்குக
A) பால் குடிக்கும் அழுத பிள்ளைதான்
B) அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்
C) அழுத பிள்ளைதான் குடிக்கும் பால்
D) பிள்ளைதான் குடிக்கும் பால் அழுத

189. "*உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்*" எனக் குறிக்கப் பெறும் நூல்
A) பெருங்காதை B) சிலப்பதிகாரம்
C) சிந்தாமணி D) குண்டலகேசி

190. *"கண்ணி"* என்ற செந்தமிழ்ச் சொல்லின் பொருள்
A) குமரி B) வஞ்சி
C) இளமை D) தலைமாலை

191. *"மாசறு பொன்னே வலம்புரி முத்தே காசறு விரையே கரும்பே தேனே"* - இவ்வரிகள் பயின்று வரும் நூல்
A) சீவகசிந்தாமணி B) சிலப்பதிகாரம்
C) மணிமேகலை D) குண்டலகேசி

192. *"உத்தம சோழப் பல்லவராயன்"* என்று போற்றப்படுபவர்
A) இராசராச சோழன் B) நந்திவர்மன்
C) கம்பர் D) சேக்கிழார்

193. *"தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே"* - இவ்வரிகள் இடம் பெற்ற நூல்
A) புறநானூறு B) அகநானூறு
C) நற்றினை D) கலித்தொகை

194. ஒருமை, பன்மை பிழைகளை நீக்குக
A) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருக்கும்
B) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருக்கின்றன
C) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருக்கிறது
D) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருப்பது

195. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்
A) குதிரைக் கூடம் B) குதிரைக் கொட்டில்
C) குதிரைத் தொழுவம் D) குதிரைப் பட்டி

196. *"பொய்யாக் குலக்கொடி"* - என்று இளங்கோவடிகள் இயம்பிய நதியின் பெயர்
A) காவிரி B) கங்கை
C) வைகை D) தாமிரபரணி

197. *"பொய்யா மொழி"* - எனப் போற்றப்படும் நூல்
A) நாலடியார் B) பழமொழி
C) நான்மணிக்கடிகை D) திருக்குறள்

198. *"மருங்கீண்டெழுகென"* - எப்படிப் பிரியும்?
A) மருங்கீண்டு + எழுகென B) மருங்கீண்டு + எழுக + என
C) மருங்கு + ஈண்டெலுக + என D) மருங்கு + ஈண்டு + எழுக + என

199. *"செய்தான்"* என்ற வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கி எழுதுக
A) செய்து B) செய்கிறான்
C) செய்தவன் D) செய்யாநின்றான்

200. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக
A) கயல்விழி தேர்வுக்குப் படிப்பாள் B) கயல்விழி தேர்வுக்குப் படித்தாள்
C) கயல்விழி தேர்வுக்குப் படிப்பித்தாள் D) கயல்விழி தேர்வுக்குப் படி

***********

*"தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ்ழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்."*
- பாரதிதான் (1891 - 1964)

Get FREE ALERTS on ur mobile! Just sms: ON SMSREADER to: 9870807070


# மாதிரித் தேர்வு - 1 (பொது அறிவு): விடைகள்

| Q.NO. | ANS | Q.NO. | ANS | Q.NO. | ANS | Q.NO. | ANS |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | A | 26 | A | 51 | A | 76 | C |
| 02 | B | 27 | A | 52 | D | 77 | B |
| 03 | B | 28 | C | 53 | B | 78 | D |
| 04 | A | 29 | A | 54 | B | 79 | A |
| 05 | C | 30 | A | 55 | A | 80 | A |
| 06 | A | 31 | B | 56 | A | 81 | C |
| 07 | A | 32 | C | 57 | B | 82 | A |
| 08 | C | 33 | A | 58 | A | 83 | B |
| 09 | B | 34 | D | 59 | C | 84 | B |
| 10 | A | 35 | B | 60 | A | 85 | B |
| 11 | B | 36 | B | 61 | D | 86 | C |
| 12 | A | 37 | A | 62 | B | 87 | A |
| 13 | A | 38 | B | 63 | C | 88 | A |
| 14 | B | 39 | D | 64 | D | 89 | D |
| 15 | A | 40 | A | 65 | B | 90 | A |
| 16 | D | 41 | A | 66 | B | 91 | B |
| 17 | C | 42 | D | 67 | B | 92 | B |
| 18 | C | 43 | A | 68 | B | 93 | C |
| 19 | B | 44 | C | 69 | B | 94 | C |
| 20 | C | 45 | B | 70 | A | 95 | A |
| 21 | A | 46 | A | 71 | C | 96 | A |
| 22 | B | 47 | A | 72 | A | 97 | C |
| 23 | A | 48 | A | 73 | A | 98 | C |
| 24 | B | 49 | B | 74 | C | 99 | D |
| 25 | D | 50 | C | 75 | A | 100 | B |
| | | | | | | | |
| | | | | | | | |

Get FREE ALERTS on ur mobile! Just sms: ON SMSREADER to: 9870807070


# மாதிரித் தேர்வு - 1 (பொதுத் தமிழ்): விடைகள்

| Q.NO. | ANS | Q.NO. | ANS | Q.NO. | ANS | Q.NO. | ANS |
|---|---|---|---|---|---|---|---|
| 101 | D | 126 | C | 151 | B | 176 | D |
| 102 | A | 127 | B | 152 | B | 177 | D |
| 103 | B | 128 | B | 153 | A | 178 | B |
| 104 | A | 129 | B | 154 | B | 179 | C |
| 105 | A | 130 | A | 155 | D | 180 | D |
| 106 | A | 131 | D | 156 | B | 181 | A |
| 107 | C | 132 | C | 157 | C | 182 | A |
| 108 | B | 133 | B | 158 | B | 183 | C |
| 109 | A | 134 | A | 159 | D | 184 | C |
| 110 | B | 135 | B | 160 | D | 185 | D |
| 111 | B | 136 | D | 161 | C | 186 | B |
| 112 | B | 137 | B | 162 | D | 187 | A |
| 113 | B | 138 | C | 163 | A | 188 | B |
| 114 | D | 139 | D | 164 | D | 189 | B |
| 115 | D | 140 | C | 165 | C | 190 | D |
| 116 | D | 141 | C | 166 | B | 191 | B |
| 117 | B | 142 | A | 167 | B | 192 | D |
| 118 | A | 143 | C | 168 | C | 193 | A |
| 119 | B | 144 | B | 169 | C | 194 | C |
| 120 | B | 145 | C | 170 | A | 195 | B |
| 121 | B | 146 | A | 171 | C | 196 | C |
| 122 | C | 147 | C | 172 | C | 197 | D |
| 123 | A | 148 | D | 173 | B | 198 | D |
| 124 | C | 149 | B | 174 | D | 199 | C |
| 125 | C | 150 | B | 175 | C | 200 | B |